சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

COS No. 1/2022

08.04.2025

**<u>வா.சா.1 மீரா க/பெ. ரவிக்குமார் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 2 எப்போது வாங்கப்பட்டது என்றால் 04.04.2019 ல் வாங்கப்பட்டது. பத்திரத்தை யார் வாங்கிவந்தது என்றால் மேகலாதேவி வாங்கிவந்தார். நான் மேகலாதேவியிடம் எப்போது பணம் கொடுத்தேன் 20.04.2019 ல் கொடுத்தேன். எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் ரூ. 12 லட்சம் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது மேகலாதேவி நான் மற்றும் 2 சாட்சிகள் என் கணவர் , 2 ம் பிரதிவாதி மாமனார் ஆகியோர்கள் இருந்தார்கள். கடன் கொடுத்த அன்று தான் பத்திரம் எழுதப்பட்டது என்றால் ஏற்கனவே வாங்கி கொண்டுவந்த பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தது 20.04.2019 அன்று பணம் கொடுத்து பத்திரத்தை வாங்கிக்கொண்டேன். என்ன பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால் கடன் பத்திரம் கொடுத்தார்கள். பணம் கொடுக்கும்போது மேகலாதேவி மற்றும் அவர்களின் வீட்டில் உள்ள பெரியோர்கள் யாரேனும் சேர்ந்து எழுதிக்கொடுக்க வேண்டும் என்று நான் சொன்னேன். மேகலாதேவி மற்றும் அவரது மாமனாரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தார்கள். அப்போது மேகலாதேவி 40 வயது இருக்கும். சொத்து பத்திரங்கள் என்னிடம் கொடுத்தார்களா என்றால் அந்த பத்திரங்கள் அனைத்தும் வங்கியில் இருப்பதாக சொன்னார்கள். மேகலாதேவி என்னைபோன்று எத்தனை நபரிடம் கடன் வாங்கியுள்ளார் என்றால் 23 நபரிடம் வாங்கியுள்ளார். கடன் கொடுக்கும்போது மேகலாதேவி அவரது மாமனார் ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்ததாக வழக்கு அறிவிப்பிலோ அல்லது பிராதிலோ சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி அதைப்படித்து பார்த்து இல்லை என்கிறார். 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பியதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கடன் வாங்கியுள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் ஏன் 1 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் 1, 2 பிரதிவாதிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் அனுப்பவில்லை. 2 ம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய அறிவிப்பை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் காவல்துறை மூலமாக பேசி பணம் வாங்கித்தருவதாக சொன்னார்கள் அதனால் அனுப்பவில்லை. இராஜகோபால் காவல்நிலைய விசாரணையில் 1 மாதத்திற்குள் பணம் தருவதாக சொன்னார். மேகலாதேவி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பிய பிறகு நானும் மற்றும் 20 நபர்களும்சேர்ந்து மேகலாதேவிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் சரிதான். மேகலாதேவி எதிராக கொடுத்த புகாரின் அடிப்படையில் அவர் மாமனாரையும் சேர்த்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு கடனை திருப்பி தருவதாக அவர்

சொன்னதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. பிராமிசரி நோட்டு என் தேதியில் யார் வாங்கினார்கள் என்றால் 20.04.2019 ல் நான் கைவசம் வைத்திருந்தேன். கடன் பத்திரம் எப்போது ஏற்பட்டது என்றால் பிரதிவாதிகள் தான் எழுதிவந்தார்கள் நேரம் நினைவில்லை. அதேபோல் புரோநோட்டும் பிரதிவாதிகள் எழுதிக்கொண்டு வந்தார்கள் எப்போது எந்த நேரம் எழுதிவந்தார்கள் என்று நினைவில்லை. கடன் பத்திரமும் , புரோநோட்டும் என்னிடம் ஒரே நேரத்தில் தான் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் யார் யார் எப்போது எழுதினார்கள் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**